விவாஹமந்திரங்களின் விசேஷங்கள் : நம் விவாஹச் சடங்குகளில் பொதிந்துள்ள தத்துவங்களும் பரந்த நோக்கங்களும் குடும்பத்திற்கும், உலக-த்திற்கும் நன்மைகளை ஏற்படுத்துபவைகளாக இருக்கின்றன விவாஹ-மந்திரங்களில் மணமக்களுக்கு தீர்க ஆயுள் உடல்நலம், ஆழ்ந்த அன்பு எல்லாவித சம்பத்துகளையும் ப்ரார்த்திப்பவைகளாக அமைந்துள்ளன நமது சமூகத்தில் தம்பதிகளின் அன்றாட வாழ்க்கையில் தெய்வீக மணம் கமழ இம்மந்திரங்கள் பெரிதும் உதவி புரிகின்றன " மந்த்ராதீனம் துதைவதம் " அதாவது தேவதைகள் மந்திரங்களுக்குக் கட்டுப்பட்டவர்கள் அந்த மந்திரங்கள் நமக்கும், தேவதைகளுக்கும் இடையே ஓர் பாலமாக இருந்து கார்யங்களைப் பூர்த்தி செய்கின்றன. ஆகவே மந்திரங்களை அவற்றின் அர்த்தம் புரிந்து நன்கு உச்சரித்து பயனடைய வேண்டுமென்பதே நம் அவா

திருமணத்தன்று காலை மணமகன் ஸமாவர்த்தனம் என்ற கர்மாவைச் செய்து முடித்து காசியாத்திரைக்குப் புறப்படுகின்றான் அப்போது பெண்ணின் தந்தை

" அலங்காரம் செய்து கொண்டு உங்களை மணக்கத் தயாராகஇருக்கும் என் பெண்ணை உமக்கு கன்னிகாதானம் செய்து கொடுக்கின்றேன் அவளை மணந்து கொண்டு கிருஹஸ்தாஸ்ரம தர்மத்தை அனுஷ்டிக்கப் ப்ரார்த்திக்கின்றேன் " என்று கூறி அந்த மணமகனை திருமண மண்டபத்திற்கு அழைத்துச்செல்வார்



மணமேடைக்குச் செல்வதற்கு முன்பு மாலை மாற்றுதல் ஊஞ்சல், பிடிசுற்று-தல் ஆகியவை நடைபெறுகின்றன மணமகளும், மணமகனும் ஒருவருக்-கொருவர் தங்கள், தாய்மாமன்கள், மாலைகளை எடுத்துக்கொடுக்க அவற்றை அவர்கள் மாற்றிக் கொண்ட பிறகு இருவரையும் ஊஞ்சலில் உட்காரவைத்து பெண்கள் பாட்டுக்களைப் பாடுவார்கள். அதன் பிறகு மஞ்சள், சிகப்பு, வெள்ளை நிற அன்னங்களை பிடியாக எடுத்து மணமக்களுக்கு எதிரேச்சுற்றி நான்கு திசைகளிலும் எறிவர். இவற்றை 5 அல்லது 7 சுமங்கலிப்பெண்கள் செய்வர் பிறகு மஞ்சளில் சுண்ணாம்பு கலந்த சிவந்த நீரால் ஆரத்தி எடுத்து கற்பூரம் ஏற்றிய தேங்காயை ஓர் ப்ரஹ்மச்சாரி சூரையாகச் சுற்றி உடைக்க வேண்டும் இவையெல்லாம் கண்ணெச்சில் படாமல் இருக்கச் செய்யப்படுபவையேயன்றி நம் சாஸ்த்திரங்களில் விதிக்கப்பட்டவை அல்ல.

தொடரும்..........